# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2338/29 - 2023 ජූනි මස 27 වැනි අඟහරුවාදා - 2023.06.27

*2338/29 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.ஓ. 4/81*(XIII)

***1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம்***

*23 ய(1)(அ) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 23 ய(1)(அ) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட் ஆகிய நான், மேற்சொன்ன பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும் 2021, சனவரி 21 ஆந் திகதிய 2211/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை, பின்வருமாறு இக்கட்டளை மூலம் திருத்துகின்றேன்.*

(அ) அதன் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உப்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

“(i) *20 மி. லீ. தேறிய கொள்ளளவிற்கு/ 20 கிராம் தேறிய நிறைக்குக் குறைவான அல்லது அதற்குச் சமமான சிறு பைகள் (உணவு, மருந்துகள் மற்றும் பீடைகொல்லிகள் பதிவாளரினால் அங்கீகரிக்கப்பட்ட விவசாய இரசாயனப் பொருட்கள் என்பவற்றைப் பொதியிடுவது தவிர) ;”;*

(ஆ) “செய்முறை” என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :-

“*பீடைகொல்லிகள் பதிவாளர்” என்பது, 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட பீடைகொல்லிகள் பதிவாளர் எனப் பொருள்படும்.”.*

***நசீர் அஹமட்,***
*சுற்றாடல் அமைச்சர்.*

கொழும்பு,
*2023, யூன் 21.*

EOG 06-0227


1A – PG 6371 – 1006 (2023/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*